# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

## O.S.NO.150/2012

Deposition of Witness : DW - 1

Name : குமரேசன்

Father's Name /W/o : லேட்.கோபால்

Religion : இந்து

Caste : -

Calling : BSNL அரசு ஊழியர்

Address : அரசாத்தம்மன் கோயில் தெரு, அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 02.09.2023.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-

1. என் தந்தை கோபால் டெலிபோன் எக்சேஞ்சில் அரசு பணியில் பணி புரிந்தார் என்றால் ஆம். தாவா சொத்துக்களை என் தந்தை 1975லிருந்து 1979 வரையில் தான் வாங்கியுள்ளார் என்றால் ஆம். என் தந்தை இந்த சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வேறு சொத்து அவருக்கு இல்லை என்றால் சரிதான். என் தாயார் திருமணம் ஆன புதிதில் ஆடு, மாடுகளை வளர்த்து வந்தார் என்றால் ஆம். என் அம்மா அதில் வந்த வருமானத்தை வைத்து தான் பி அட்டவணை சொத்தை என் தாயார் பெயரில் அவர் வாங்கினார் என்றால் இல்லை. பி அட்டவணை சொத்து என் தாயாரின் தனி வருமானத்தை வைத்து வாங்கிய சொத்து என்றால் அவர் வாங்கவில்லை. என் பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு வயது 49 என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆம். வாதிகள் 7 பேரும் என் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் ஆம்.

2. வாதிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் வரிசையாக பிறந்தவர்கள், 6ம் வாதி கிருஷ்ணவேணிக்கு பிறகு நான் பிறந்தேன் என்றால் ஆம். 5ம் வாதி அமுதாவிற்கு

1990ல் ஆனது என்றால் வருடம் ஞாபகம் இல்லை. காதல் திருமணம் ஆகும். 4ம் வாதி உமாவிற்கு 1988ல் திருமணம் ஆனது என்றால் ஆம். 1988 முதல் 1990க்குள் இருக்கும். உமாவிற்கு பிறகு தான் அமுதாவிற்கு திருமணம் ஆனதா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. தற்போது எனக்கு 49 வயது என்றால் 1990ல் எனக்கு 16 வயது என்றால் ஆம். எனவே வாதிகளுக்கு நான் தான் திருமணம் செய்து வைத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளிற்கினங்க கு.வி.தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகின்றது).